அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு, இன்று யானைகளினுடைய அட்டகாசத்தினாலே, அவர்களுடைய வாழ்க்கையிலே பல்வேறு இடர்கள் ஏற்படுகின்றன.

6. அறிவிப்பு

உறுப்பினர்களுக்கு, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல்—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய புத்தகங்கள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த புத்தகங்கள் பேரவைச் செயலக நூலகப் பிரிவு-2-ன்மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட உள்ளன. அவற்றை உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2007–2008 விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய பதிலுரையைப் புறக்கணித்து, வெளிநடப்புச் செய்கின்றோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.